சார்பு நீதிமன்றம், மேலூர்

HMOP.140/2025

| | |
|---|---|
| பெயர் | : சரண்யா என்ற கார்த்திகா |
| தகப்பனார் பெயர் | : |
| கணவர் பெயர் | :கார்த்திக் |
| வயது | : 24 |
| கிராமம் | :கொண்டையம்பட்டி |
| வட்டம் | : மதுரை |
| தொழில் | :வீட்டுக்குடித்தனம் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

11.11.2025

ம.சா.2 முதல் விசாரணை:

நான் இந்த மனுவில் 2வது மனுதாரர். என்னுடைய கணவர் இந்த மனுவில் 1ம் மனுதாரர் ஆவார். என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். எனக்கும், 1வது மனுதாரரான எனது கணவருக்கும், கடந்த07.02.2020 தேதியில் ஊமச்சிகுளம் கணேஷ் மகாலில் வைத்து திருமணம் நடந்தது. எங்களுக்குள் குழந்தைகள் திருமணத்தில் ஒரு மகள் உண்டு. எனக்கு சீர்வரிசையாக கொடுத்த பொருட்கள், தங்கநகை, வெள்ளிசாமான்கள் என்னுடைய கணவரான 1ம் மனுதாரரிடம் இருந்து பெற்றுக்கொண்டேன். மேலும் 1ம் மனுதாரரிடம் இருந்து ஜீவனமாக எதுவும் பெறவில்லை. மேலும் வாடிப்பட்டி, நீதித்துறை நடுவர் நீதிமன்றம் முன்பாக ஜீவனாம்சம் வழக்கு நிலுவையில் உள்ளதால் அதில் வாங்கி கொள்ளலாம் என்று முடிவு செய்துள்ளோம். என்னுடைய ஆதார் அடையாள அட்டை ஒளிநகல் ம.சா.ஆ.5. நாங்கள்

மனமொத்து விவாகரத்து மனு தாக்கல் செய்துள்ளோம். ஆக மனுப்படி எங்களுக்குள் ஏற்பட்ட திருமணத்தை ரத்து செய்ய வேண்டி பிரார்த்திக்கிறோம்.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.11.11 21:42:52 +0530

Sub Judge
Melur